# பரி.பவுல்
# அஹமதி தமிழ் திருச்சபை
## குவைத்

" கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் "

நெகேமியா 8:10

# செய்திமலர்

**இதழ்:09** **மலர்:30**

## May 2026

www.ahmaditamilchurch.com

# முதன்மை ஊழியரிடமிருந்து



## "தேவனால் எல்லாம் கூடும்"

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள். நம்மையும் நம் குடும்பத்தையும், நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கர்த்தர் இதுவரை நம்மோடு கூட இருந்து நடத்தி வந்திருக்கிறார். இதை நினைவு கூர்ந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கடந்த மாதம் நடைபெற்ற ஆராதனைகள் ஜெபக் கூடுகைகள் விசேஷித்த கூடுகைகளில் கலந்து கொள்ள கர்த்தர் பாராட்டின தயவுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம்.

கடந்த காலங்களில் விசேஷித்த ஆராதனைகளாகிய குறுத்தோலை ஞாயிறு, வியாகுல வியாழன், புனித வெள்ளி மற்றும் உயிர்த்தெழுந்த ஆராதனை ஆகியவற்றை நடத்தக் கூடாதபடி சுற்றி அநேகம் தடைகள் உண்டான பொழுதும் கர்த்தர் நாம் இப்படிப்பட்ட பண்டிகை நாட்களை அனுசரிக்க கர்த்தர் நமக்கு பாராட்டின கிருபையை நினைவு கூர்ந்து கர்த்தருக்கு நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துவோம். ஏனென்றால் அநேக கிறிஸ்தவர்களுக்கு

இப்படிப்பட்ட விசேஷித்த நாட்களை அனுசரிக்க முயற்சி செய்தும் கூடாமல் போனது என்பதை நாமும் அறிந்திருக்கிறோம். நமக்கு கர்த்தரே கிருபை செய்தார். தேவனுக்கே ஸ்தோத்திரம்.

தேவனுக்கு பிரியமானவர்களே! தேவனிடமிருந்து நன்மைகளை ஆசீர்வாதங்களை எதிர்பார்த்து காத்திருக்கிற நாம் தேவனுக்கு கொடுக்கிற காரியத்தில், தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து பிறருக்கு உதவுகிற, கொடுக்கிற காரியங்களில் நாம் எவ்வளவு கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொள்ளுகிறவர்களாய் காணப்படுகிறோம் என்று நம்மை நாமே தர்பரிசோதனை செய்ய வேண்டும்.

மாற்கு 10:17-22 ல் உள்ள வேத வசனங்களை நாம் பார்க்கும் பொழுது, ஒருவன் இயேசுவிடம் வந்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது; உனக்கு உள்ளவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு என்று இயேசு சொன்னபோது அவன் மனம்மடிந்து துக்கத்தோடே போய்விட்டான் என்று வேதம் கூறுகிறது. இந்த மனிதனுக்கு உண்டாயிருந்த சகல ஆஸ்தியும் தேவன் அந்த மனிதனுக்குக் கொடுத்தார் என்பதை அவன் மறந்து போனான். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவன் கொடுத்திருந்தால் தேவன் மல்கியா 3:10 ன்படி அதிகமாய் அவனுக்குக் கொடுத்திருப்பார் என்ற விசுவாசம் அற்றவனாய் துக்கத்தோடே அவன் போய்விட்டான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. அவனுடைய முடிவு என்னவென்று வேதம் குறிப்பிடவில்லை என்றாலும், தேவனுக்கு அவன் கீழ்ப்படியவில்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ளமுடியும்.

நாம் தேவனுக்கு கொடுக்கிறதில்; பிறருக்கு உதவுகிற, கொடுக்கிறதில் நாம் சீர்பொருந்த வேண்டும் என்று இயேசுவின் இந்த போதனை நமக்கு விளங்கப்பண்ணுகிறது என்பதை ஏற்றுக் கொண்டு, இவைகளை நாம் கைக்கொள்ளும் போது நாம் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் அதிகமாய் தேவன் நம்முடைய வாழ்க்கையில் நம் குடும்பத்தில் செய்வார் என்பதை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். நம் **“தேவனால் எல்லாம் கூடும்”** (மாற். 10:27). கர்த்தர்தாமே எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்

கர்த்தர் கிருபையில்

சகோ. ஆரோக்கியதாஸ். P

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த செய்தி மலர் மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தேவ செய்திக்காக தெரிந்து கொண்ட பாத்திரம் நெகேமியா அதாவது நெகேமியாவின் ஜெபம் இந்த நெகேமியாவின் ஜெபம் நமது வாழ்க்கையிலும் கூட ஒரு சவாலாக இருக்கிறது. நெகேமியா சூசான் அரண்மனையில் ராஜாவுக்கு பான பாத்திரக் காரனாயிருந்தான். அரண்மனையில் மிகவும் சமாதானமாக சந்தோஷமாக வாழக்கூடிய வாழ்க்கை அவனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இந்த அரமனையில் வாழ்ந்து கொண்டிருந்த நாட்களில் எருசலேமில் சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்த தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள் என்றும் எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டது என்றும் அதின் வாசல்கள் சுட்டெரிக்கப் பட்டதுமாய் கிடக்கிறது என்று கேள்விப்பட்டான் நெகே 1:3. இந்த செய்தியை கேள்விப்பட்ட போது மனதளவில் மிகவும் வேதனைப்பட்டான். தன் தேசம் பாழாய் கிடக்கிறதை கண்டு துக்கித்தான் அழுதான் அலங்கம் இடிக்கப்பட்டதால் தன் தேசம் ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு தள்ளப்பட்டதை அறிந்து வேதனைப்பட்டான். தன் ஜனங்களுக்காகவும் தன் தேசத்துக்காகவும் அவன் மனதளவில் துக்கித்தான்.

**1.தன்னை ஒடுக்கி தன் தேசத்துக்காக ஜெபித்தான் நெகே 1:4.5.**

நெகேமியா 1:4 ல் பார்க்கும் போது அழுது சில நாளாய் துக்கித்து உபவாசித்து தேவனை நோக்கி மன்றாட வேண்டும் என்று உணர்ந்தான். யார் எப்படி போனால் என்ன? நான் சுகமாக இருக்கிறேன் என்று நினைக்காமல் எருசலேமின் செய்தியை கேட்டபோது தன் இருதயம் உடைக்கப்பட்டவனாய் அழுதான். பரலோகத்தின் தேவனை நோக்கி அழுதான் உம்முடைய கற்பனைகளை கைகொள்ளுகிறவர்களுக்கு கிருபையை காக்கிற தேவனே நெகே1:5 என்று மன்றாடுகிறான்.

**2.தானும் தன் வம்சத்தாரின் பாவங்களை அறிக்கையிட்டு ஜெபித்தான் நெகே1:6**

உமது அடியாராகிய நாங்கள் உமக்கு விரோதமாக செய்த பாவங்களை மன்னியும் உமக்கு முன்பாக மிகவும் கெட்டவர்களாக நடந்தோம் மோசே கற்ப்பித்த கற்பனைகளையும் கட்டளைகளையும் கை கொள்ளாமற் போனோம் என்று தங்கள் குற்றங்களை அறிக்கையிட்டு ஜெபிக்கிறான்.

**3. கர்த்தர் தந்த உடன்படிக்கையை சொல்லி ஜெபித்தான் நெகே 1:9**

தேவரீர் உம்முடைய தாசனாகிய மோசேக்கு கட்டளையிட்ட வார்த்தையை நினைத்தருளும் என்று கெஞ்சி ஜெபித்தான் என்று பார்க்கிறோம்.

**4. கர்த்தரின் நாமத்துக்கு பயப்பட வேண்டும் என்று விரும்புகிறோம் என்று ஜெபித்தான் நெகே1:11**

ஆண்டவரே உமது அடியானின் ஜெபத்தையும் உமது நாமத்துக்கு பயப்பட விரும்புகிறோம் என்றிருக்கிற உமது அடியாரின் ஜெபத்தையும் கேட்டு இன்றைக்கு காரியத்தை கை கூடி வரப்பண்ணும் என்று மிகுந்த உருக்கத்தோடு ஜெபித்தான். அவன் ஏறெடுத்த விண்ணப்பத்தை தேவன் கேட்டு அன்றைக்கே காரியத்தை கை கூடி வரப்பண்ணினார். நெகே 2 வது அதிகாரத்தில் பார்க்கும் போது அவன் ஜெபித்துவிட்டு ராஜாவுக்கு முன் போய் நின்ற நெகேமியாவை ராஜா பார்த்து அவன் துக்க முகத்தை பார்த்து விசாரித்தான் நெகே 2:3. நீ கேட்கிற காரியம் என்ன என்று ராஜா கேட்கிறான்இ நெகே 2:5 ல் தன் தேவையை நெகேமியா சொல்வதை பார்க்கிறோம். நெகேமியாவின் விண்ணப்பத்தை கேட்ட ராஜா உடனே அதை செய்ய சம்மதித்தான். தேவனுடைய தயவுள்ள கரம் நெகேமியாவின் மேல் இருந்த படியால் ராஜா அவைகளை அவனுக்கு கட்டளையிட்டான் என்று நெகே 2:8 ல் பார்க்கிறோம்.
நெகேமியா எருசலேமுக்கு போய் தன் ஜனங்களை கூட எருசலேமின் அலங்கத்தை ஐம்பத்திரண்டு நாட்களுக்கும் கட்டி முடித்தான். சன்பல்லாத்தும் தொபியா போன்ற அம்மோனியர்கள் அவர்களை பார்த்து ஒரு நரி ஏறிபோனதை கூட இந்த மதில்

இடிந்து விழுந்து விடும் என்று பரியாசம் பண்ணினார்கள். ஆனால் அவனோ மனம் தளராமல் கர்த்தரின் உதவியோடு அலங்கத்தை கட்டி முடித்தான் அல்லேலூயா. தான் சமாதானமாய் சந்தோஷமாய் வாழ்ந்த போதும் தன் தேசம் சுட்டெரிக்கப்பட்டு கிடப்பதை கேள்விக்கட்டவுடன் வேதனையடைந்து அழுது துக்கமடைந்து உபவாசித்து மன்றாடி ஏறெடுத்த விண்ணப்பத்தை கர்த்தர் கேட்டு அவன் காரியத்தை கைகூடி வரப்பண்ணினார்.இவ்வளவு வேதனைப்பட்டு அழுது ஜெபித்த நெகேமியா அதிகாரம் 8:10 ல் **"கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்"** என்றார்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த காலத்திலும் நெகேமியாவை போல அவன் தன் சொந்த தேசத்திற்காக கொண்ட பாரத்தை போல நாமும் நம் தேசத்திற்காகவும் நம் சபைக்காகவும் சபையின் குடும்பங்களுக்காகவும் மனதளவில் பாரம் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவருக்கும் உபவாசமும் மன்றாட்டின் ஜெபமும் இக்கால கட்டத்தில் மிகவும் அவசியமாயிருக்கிறது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து தப்பித்து கொள்ள தேவனுடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைகொள்ளவும் அவருக்கு பயப்படும்படியான விருப்பம் உள்ளவர்களாய் மாறி நம் பாவங்களை அறிக்கையிட்டு உபவாசித்து ஜெபிக்கும் போது தேவன் நம் யாவரையும் விடுவித்து பாதுகாக்க வல்லவராய் இருக்கிறார். **" ஆபத்து காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமைப்படுத்துவாய் "** சங் 50:15.

தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்

சகோ. ஏசுரெத்தினம்.

## வாலிபர் பகுதி

நீதி 4:23 எல்லா காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். வசனம் சொல்கிறது எல்லா காவலோடும் என்று இதை தியானிக்கும் போது நம்முடைய கண்களினால் பார்க்கிறதை இச்சிக்கிறோம். யாக்கோபு எழுதின நிருபத்திலே 1:15 ல் வாசிக்கிறோம் இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும் வாலிபர்களாகிய நாம் ஆண்டவருக்கு பிரியமில்லாத நம் கண்களுக்கு இனிமையாய் குளிர்ச்சியாய் தோன்றுகிற காரியங்களை பார்க்கும் போது சிந்தனைகளால் இச்சித்து அதை கர்ப்பம் தரிக்கிறவர்களாய் காணப்படுகிறோம்.

சிம்சோனை குறித்து பார்க்கும் போது நியா 13:5 ல் அவன் இஸ்ரவேலை பெலிஸ்தியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கத் தொடங்குவான் என்று தேவனால் முன் குறிக்கப்பட்டவன் கண்களின் இச்சைகளினால் பாவத்தில் உழன்று தன் வாழ்க்கை முடித்துக் கொண்டதை பார்க்க முடிகிறது. நியா 14–16 அதிகாரங்களில் நியாயா 14:1–3 ஆண்டவருக்கு பிரியமில்லாத பெலிஸ்தியரின் சந்ததியில் ஒரு பெண்ணை கண்டான் என்று பார்க்கிறோம். அதை தன் பெற்றோருக்கு தெரிவித்து அவளை எனக்கு திருமணம் செய்ய வேண்டும் என்று நியாயா 14:2 ல் பார்க்கிறோம்.

முதலாவது பார்க்கிறான் பின்பு விருப்பத்தை இருதயத்தில் வைக்கிறான். நியா 14:3 ல் அவள் என் கண்களுக்கு பிரியமானவள் என்றுசொல்லி அந்த பாவத்தை கர்ப்பந்தரிக்கிறதைப் பார்க்கிறோம். நியாயா 16:21 கண்களில் பாவம் செய்த அவன் இரண்டு கண்களும் பிடுங்கப்பட்டு பார்வையிழந்தவனாய் காணப்பட்டான்.நியாயா 28:14 ல் பார்க்கிறோம் தன் இருதயத்தை கடினப்படுத்துகிறவன் தீங்கிலே விழுவான் என்று. யோபு சொல்கிறார் யோபு 31:1 ல் என் கண்களோடு உடனபடிக்கைப்பண்ணின நான் ஒரு கண்ணிகையின் மேல் நினைவாயிருப்பது எப்படி? என்று சொல்கிறதை பார்க்கிறோம்.
II சாமுவேல் 11:2_4 ல் பார்க்கிறோம் தாவீது தன் கண்களினால்

இச்சித்ததை அடைந்தான் என்று பார்க்கிறோம். ஆனால் அவன் மனந்திரும்பி பாவத்தை அறிக்கையிட்டு தேவனுடைய சமூகத்தில் திரும்பின போது அவன் பாவத்தின் தோஷத்தை மன்னித்து இழந்து போன அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டான் என்று சங் 51 ல் பார்க்கிறோம்.

ஆம் பிரியமானவர்களே இப்படிப்பட்ட பாவத்தில் சாத்தான் விரிக்கிற வலைகளில் விழுந்துவிடாதபடி வாலிபர்களாகிய நாம் யாவரும் பரிசுத்தமாய் வாழ பிரயாசப்படுவோம். தினமும் தேவனை தேடுகிறதில் சோர்ந்து போகாமல் இன்னும் அதிகமாய் தேவ சமூகத்தில் ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் தரித்திருப்போம் நம் பரிசுத்தத்தை காத்துக் கொள்வோம். தாவீதை குறித்து தேவன் சொன்னது போல " என் இருதயத்துக்கு ஏற்றவன் " என்கிற சாட்சியோடு வாழ்வோம். பிர 11:9 ல் வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும் உன் நெஞ்சின் வழிகளிலும் உன் கண்ணின் காட்சிகளிலும் நட ஆனாலும் இவைகள் எல்லாவற்றினிமித்தம் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறிந்துகொள்.

**கிறிஸ்துவின் பணியில்**

ATC Youth Team

Be an Example : I Timothy 4:12

## தேவன் விரும்பும் இருதயம்

**சங்-51:16-17 பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன். தகனபலியும் உமக்கு பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்.தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.**

**தேவன் நம்முடைய பணத்தையோ, பலத்தையே அல்ல இருதயத்தைப் பார்க்கிறார். கர்த்தர் இருயதயத்தை ஆராய்கிறவரும், உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருாயிருக்கிறார். (எரேமி-17:10).**

# பரலோக விருந்து (Paradise Dinner)

நமது அன்றாட வாழ்க்கையில் நம்மை எச்சரிக்கவும். நமக்கு வழிகாட்டவும் அநேகம் அறிவிப்பு பலகைகள் தெருக்களிலும் கடைகளிலும் வீடுகளிலும் அலுவலகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை நமது கிறிஸ்தவ வாழ்க்கையோடு ஒப்பிடக் கூடிய சிலவற்றை இங்கே கவனிப்போம்.

## 1. நல்வரவு (Welcome)

(1) வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்.11:28)
(2) எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள் (மத்.22:4, லூக்.15:28)
(3) கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவரே,
உள்ளே வாரும் நீர் வெளியே நிற்பானேன் (ஆதி.24:31).

## 2. இங்கே நடக்கக் கூடாது (Don´t walk here)

(1) துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாதே (சங்.1:1)
(2) மாம்சத்தின்படி நடவாதே (ரோ.8:1,4,5,– 2.பேது.2:7,10)
(3) ஒழுங்கற்று நடவாதே (2.தெச.3:6, 2.கொரி.4:2, எபேசி.4:17, 5:15

## 3. அபாயம் (Danger)

(1) பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர்.6:23)
(2) பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்.18:4,18)
(3) உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் (எண்.32:23)

## 4. சாப்பாடு தயார் (Meals Ready)

(1) ஜீவ அப்பம் நானே, என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு.
(யோ.6:48,54 –56, 1.கொரி.11:26, 10:16–17)
(2) என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது.
நானோ பசியினால் சாகிறேன் (லூக்.15:17, ஆதி.25:34)
(3) கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும், நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அவர்களைச் சேரும் (ஏசா.23:18, (1.இராஜா.17:1–6)

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி–12:2 ) "




Sis. மரிய குளோரி தாஸ்
Sis. தேவ கிருபை
Sis. கேத்ரீனா சுதன்யா
சகோ. கிதியோன் ராஜ்
செல்வன். தாரோன்
சகோ.ஜெரேமியா
சகோ. ஸ்டீபன். T
செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
சகோ. ஜோன்ஸ் செல்வா சிங்
Sis. எலிசபெத் ஸ்டாலின்
Sis.ஹெலன் ஷீஜா ராபின்ராஜ்
செல்வி. சித்ரா ராஜன்
செல்வன். இவான்ஸ் ஸ்டெர்லின்
செல்வன். பால் சாமுவேல் தாமஸ்
சகோ. எபிநேசர்
செல்வன்.ஜாஸ்வா ஷாஜின் ஹெக்கில்
செல்வன். டோனி ராமமூர்த்தி
சகோ. ஜோன்ஸ் ராஜ்
சகோ. ஆனந்த் ராஜ்
செல்வன். மில்டன் பக்தராஜ்
செல்வன். நெல்சன் கண்ணன்
சகோ. பால முருகன்
செல்வி. ரீமா ரோஸ் எபெநேசர்

சகோ.குணா ஆனந்த்
சகோ. சாமுவேல் தாசையா
Sis. தங்க மெல்பா தாசையா
செல்வன். எபின் பிரைஸ் கிறிஸ்டோபர்
சகோ. தர்மர்
செல்வி. எவாஞ்சலின் சரோன்
சாமுவேல்
சகோ. ஜியோப் ஸ்நேக்கல்
சகோ. ராஜவேல்
சகோ. ஜோஸ் ஜோஷ்வா
Sis. குமுதினி வில்சன்
செல்வன். ஏபெல் ராஜ் எபிநேசர்
செல்வி. மெர்லி தெபோரா ஆமோஸ்
சகோ. சந்தோஷ் குமார்
சகோ. ஆண்டனி சாமி
சகோ. பிரிட்ஸ்லின் ஜாக்சன்
சகோ. விஜயன்
Sis. எஸ்தர் சாம் சுந்தர்
செல்வி. ஜோயல் ஹெக்கில்
Sis. அருள் நான்சி பிராங்ளின்
Sis. லதா சுஜின் ஹெக்கில்
சகோ. வடிவேலு

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)



திருமதி/திரு. பேபிட் செல்பின்&ஏஞ்சலின் டென்சி
திருமதி/திரு. கிதியோன்&நிஜா
திருமதி/திரு. எபிநேசர்&டெய்சி
திருமதி/திரு. சுஜின் ஹெக்கில்&லதா
திருமதி/திரு. ஸ்டாலின்&எலிசபெத்
திருமதி/திரு. வில்சன்&வித்யா
திருமதி/திரு. எட்வின் சாம் ஞானதுரை&ரஞ்சிதா குமாரி
திருமதி/திரு. கிரன் குமார்&ஐரின்
திருமதி/திரு. சந்தோஷ்&பிரமிளா

திருமதி/திரு. அருண் செல்வகுமார்&ஏஞ்சலின் கிறிஸ்டினா
திருமதி/திரு. தாமஸ்&அல்ஜியா
திருமதி/திரு. சுபின் சிங்&ஆஸ்லின்
திருமதி/திரு. ஜோன்ஸ் ராஜ்&நித்யா
திருமதி/திரு. ஈஸ்டர் ராஜ்&எலிசபெத்
திருமதி/திரு. ஜான் போஸ்கோ&ஜாய்ஷகினா
திருமதி/திரு.ஆல்வின் ஜூலியஸ்&அனிஷா
திருமதி/திரு. எட்வர்ட் சந்தோஷ்&சவிதா
திருமதி / திரு. M.கிறிஸ்டோபர்&ஷீஜா
திருமதி/திரு. வெனீஷ்&கேத்ரீனா சுகன்யா

# 2026 – மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/05/2026 | Sis.ஜீனா சதீஷ் | Sis.பிரிசில்லா ஆமோஸ் |
| 10/05/2026 | சகோ.கிரன் | சகோ. தாமஸ் |
| 17/05/2026 | Sis.செலின் டேவிட் | Sis.தயா ஏசு ரத்தினம் |
| 24/05/2026 | சகோ. பிரசாத் | சகோ. பிராங்கிளின் |
| 31/05/2026 | சகோ.M.கிறிஸ்டோபர் | சகோ. டேனியேல் மனோஜ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/05/2026 | சகோ. எபினேசர் | சகோ. சாம் ஆனந்த் |
| 08/05/2026 | தாய்மார்கள் தின ஆராதனை | |
| 15/05/2026 | சகோ. சாம் சுந்தர் | சகோ. ஸ்டாலின் |
| 22/05/2026 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 29/05/2026 | சகோ. அருண் செல்வகுமார் | சகோ.ஏசு ரத்தினம் |

## ஆராதனை ஒழுங்குகள்

**சங்கிலி தொடர் ஜெபம்**

07/05/2026 மாலை 6:00 முதல் 08/05/2026 காலை 6:00 வரை

**07/05/2026**
**முழு இரவு ஜெப ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல்
அதிகாலை 1:00 மணி வரை

**23/05/2026**
**சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல்
இரவு 8:15 மணி வரை
வேத வினா பகுதி – I & II தீமோத்தேயு

**22/05/2026–அறுப்பின் பண்டிகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

**29/05/2026**
**வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல்
இரவு 8:15 மணி வரை
வேத வினா பகுதி–சங்கீதம்– 51 To 115 வரை

**30/05/2026–Saturday**
Area Prayer Cell
Time-6:30-7:30

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 ரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

**செவ்வாய்கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 மே மாதத்திற்கான வேத வினா!



**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. கர்த்தருடைய ராஜ்யத்தின் செங்கோல் எப்படிப்பட்டது ?
2. கர்த்தரின் கிரியைகளின் மேல் யாரைக் கர்த்தர் அதிகாரியாக வைத்தார் ?
3. ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கான எவ்வித இருதயம் இருக்கக்கூடாது ?
4. வானங்கள் வழியாய் பரலோகத்திற்குப் போனவர் யார் ?
5. ஏற்ற காலத்தில் நமக்கு கிடைப்பது எது ?
6. ஜனங்களுடைய பாவங்களுக்காக பலியிட வேண்டியது யார் ?
7. நம் ஆத்துமா ஈடேற என்ன செய்ய வேண்டும் ?
8. விசுவாசத்தினாலே யாக்கோபு யாருடைய குமாரரை ஆசீர்வதித்தான் ?
9. கசப்பான வேர் முளைத்தெழும்பினால் எது உண்டாகும் ?
10. இருதயம் எதினாலே ஸ்திரப்படுகிறது நல்லது ?
11. பொதுவான கேள்வி – எபிரேயர் நிருபத்தின் கருப் பொருள் என்ன ?
12. எதை விட்டு விடலாகாது ?
13. ஆசாரிய ஊழியத்திற்கென்று ஒருவன் யாரால் அழைக்கப்பட வேண்டும் ?
14. கிறிஸ்துவானவர் எவைகளின் இரத்தத்தினால் மீட்பை உண்டாக்கவில்லை ?
15. கிறிஸ்து யாரை ஒரே பலியினால் பூரணப்படுத்தியிருக்கிறார் ?

விடைகளை வருகின்ற 20-05-2026 க்குள்
(WhatsApp - +91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

**“எபிரேயர் ”**

அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**…தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

## 2026- ஏப்ரல் மாத வேத வினாவுக்கு விடை

1. எருசலேமுக்கு. சகரியா2:4,5
2. கர்த்தரின் தாசன். சகரியா 3:8
3. எருசலேம். சகரியா 12:3
4. தூக்கு நூல். சகரியா 4:10
5. கருப்பு வெள்ளை. சகரியா 6:6
6. மரக்கால். சகரியா 5:10,11
7. எருசலேமின் குடிகளை. சகரியா 12:7,8
8. சாத்தான். சகரியா 3:1
9. கிருபையுண்டாவதாக சகரியா 4:7
10. மேசியாவின் வருகை
11. ஆண்டவரின் சமூகத்தில். சகரியா 4:14
12. அளவு நூல். சகரியா 2:1
13. எருசலேமும் அதை சுற்றிய பட்டணங்கள். சகரியா 7:7
14. உடன்படிக்கையின் இரத்தத்தினால். சகரியா 9:11
15. மேய்ப்பனில்லாததினாலே. சகரியா 10:2

## 2026- ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. பியூலா மெர்சி பால்
சகோதரி. சுகந்தி
சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. சாந்தி
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. ஜீனா சதீஷ் குமார்
சகோதரி. நகோமி ஜான்சன்
சகோதரி. பத்மினி வர்க்கீஸ்

சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. மரிய குளோரி தாஸ்
சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. ஜாஸ்மின் பென்சாம்
சகோதரி.நிஜா
சகோ. ராஜா துரை
சகோ. எபிநேசர்
சகோ. பால்ராஜ்

# சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நாம் கர்த்தருக்கு காத்திருக்கும் போது தேவன் நம் காரியத்தை ஒழுங்குபடுத்துகிறார்.

ஒருகாரியத்தை குறித்து துக்கம், அல்லது கவலை மனதில் உண்டானால் தேவனுடைய ஆறுதலுக்காக வார்த்தைக்காக காத்திருப்பது நல்லது. கர்த்தருக்கு காத்திருக்கும் போது தேவன் எப்படி நம்மை வழிநடத்துவார் என்று தியானிப்போம்.

**1. கர்த்தருக்கு காத்திருப்போரை உயரத்துவார்**

சங் 37:34 நீ கர்த்தருக்கு காத்திருந்து அவருடைய வழியை கைக் கொள். அப்பொழுது நீ பூமியை சுதந்தரித்து கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்.

கர்த்தருக்கு பிரியமான வழியில் நடந்து அவருக்காக காத்திருக்கும் போது தேவன் பூமியை சுதந்தரித்துக் கொள்வதற்கு நம்மை உயர்த்துவார். ஆசிர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள இந்த இரண்டு காரியத்தை நாம் செய்ய வேண்டும். நமது வழிகள் கர்த்தருக்கு பிரியமானதாக இருக்க வேண்டும். தேவனுக்கு பிரியமான வழியில் நடக்க வேண்டும். தேவனுக்காக காத்திருக்க வேண்டிய வழிகள் எப்படி காக்க பட வேண்டுமானால் சங் 15:2_4 உத்தமனாய் நடந்து நீதியை நடப்பிப்பவனாக இருக்க வேண்டும் மனதார சத்தியத்தை பேசுபவனாக இருக்க வேண்டும். தன் தோழனுக்கு தீங்கு செய்யாதவனாக இருக்க வேண்டும். சங் 37:1–3 ல் வாசிக்கிறபடி தேவனுக்கு பிரியமாக வாழ்பவனை அவர் நியாயம் விசாரிக்கப்படுகையில் ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பதில்லை.

**2. கர்த்தருக்கு காத்திருப்போரின் காரியம் வாய்க்கும்**

சங் 37:5 ல் உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.

நம் நம்பிக்கைதேவனிடத்தில் இருக்கவேண்டும். அப்பொழுது நாம் நடக்க வேண்டிய வழியை காண்பித்து நம்மேல் அவர் கண்ணை வைத்து ஆலோசனை தரும் தெய்வமாக இருக்கிறார். கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்ட மனிதன் தான் பாக்கியவான். தீங்குநாளில் அவர் அவனை தமது கூடார மறைவில் ஒழித்து வைத்து கன்மலை மேலே உயர்த்தி அவன் காரியத்தை வாய்க்க பண்ணுகிற தேவனாய் இருக்கிறார். கர்த்தரிடத்தில்

மன மகிழ்ச்சியாய் இருக்கும் போது அவன் காரியத்தை வாய்க்க பண்ணுகிற தேவனாய் இருக்கிறார். கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாய் இருக்கும் போது அவர் காரியத்தை வாய்க்க செய்வார். ஜெபம் பண்ணுவதிலும் வேதம் வாசிப்பிலும் சபை கூடிவருதலிலும் உதாரணத்துவமாய் கொடுப்பவர்களிடத்திலும் தேவன் பிரியமாய் இருக்கிறார். அதற்கு எப்படி காத்திருக்க வேண்டும்.

**1.இடைவிடாது காத்து இருக்க வேண்டும்**

சங் 130:6 எப்போது விடியும் என்று காத்திருக்கிற ஜாமக்காரரை பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்கு காத்திருக்கிறது. இடைவிடாது இரவும் பகலும் அவரை நோக்கி கூப்பிட வேண்டும் காலையில் உமது கிருபையும் இரவில் உமது சத்தியமும் வழி நடத்த வேண்டும். உமது வேதத்தை நேசித்து உமது வழிகளில் நடந்து உமக்காக வாழ்பவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு. அவர்களுக்கு இடறலில்லை என்று வேதம் கூறுகிறது.

**2. திடமனதாய் காத்திருக்க வேண்டும்**

சங் 31:24 கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களே நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள் அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். திடமனதாய் இருந்து கர்த்தருக்குகாத்திருக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.சூழ்நிலைகளை பார்க்கும் போது முரண்பாடுதான் ஆனால் வேதம் சொல்லுகிறது அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்க்கும் சங் 38:15. கர்த்தாவே உமக்கு காத்திருக்கிறேன் என் தேவனாகிய ஆண்டவரே நீர் மறு உத்தரவு கொடுப்பீர். என்று வாக்குதத்தம் பண்ணி இருக்கிறார்.

ஏசா 35:10—12 ல் வாசிக்கிறது போல கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்த களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலைமேலிருக்கும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். உமக்காக காத்திருக்கும் தேவ பிள்ளைக்கு சீயோனின் வாழ்வை கட்டளையிடுவீராக சஞ்சலம் தவிப்பும் இல்லாத எருசலேமின் வாழ்வை தருவீராக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்

Sis.ஆஸ்லின் சுபின்சிங்

# ANSWER'S FOR THE MONTH OF MARCH

1. Achsah Judges 1:12
2. Adonibezek Judges 1:6-7
3. Othniel Judges 3:9
4. Ehud Judges 3:15
5. Shamgar Judges 3:31
6. Deborah Judges 4:4
7. Joel Judges 4:21
8. Gideon Judges 7:7
9. Fleece of wool Judges 6:37
10. Jotham Judges 9:5

But Jesus called them unto him, and said, Suffer little children to come unto me, and forbid them not: for of such is the kingdom of God.

Luke 18:16

## CHILDREN WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF MARCH

Ryan
Abel Raj
Solomon
Felisha
Feshika

Hanish
Adriel
Andrea
Sifeoshika
Rheul Ashkinaz

# Kids Corner

## APRIL MONTH QUIZ FOR CHILDREN

1. What did Jephthah Vow to the Lord ?
2. Who first came out to meet Japhthah ?
3. What word was used to test the Ephrainites ?
4. What animal did Samson Kill with his Bare hand?
5. What came out of the lion's carcass ?
6. What Weapon did Samson use to kill 1000 men ?
7. What was the secret of Samson Strength ?
8. What was Stolen from Micah ?
9. What did Micah make with the silver ?
10. How many men of Benjamin Survived ?

***Kids Find the answer from the Book of***

**"Judges 11-21"**

## About Faith

In the soil of the heart, a seed is sown.
A tiny speck of faith, often unknown
With care and trust, it begins to sprout.
Growing stronger as we cast out doubt.

Through trials and storms, it perseveres.
This small seed of faith, calming fears.
With roots in God's love, it takes its place.
A mighty oak of faith, by His Grace.

In faith's embrace, we find our way.
Guided by God's light, day by day.
Through small at first, it holds the scope.
To fill our lives with endless hope.

> இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது,
>
> வெளி 15:5





## தேவாலய திறப்பு விழா அறிக்கை
## கிறிஸ்து தேவாலயம்
## ஹண்டிபங்கா கிராமம், புவனேஸ்வர் ,ஒடிசா, இந்தியா

**திறப்பு விழா நாள்: 22 பிப்ரவரி 2026**

**பயணம் மற்றும் பாரம்பரிய வரவேற்பு**



தேவனுடைய கிருபையால் 22 பிப்ரவரி 2026 அன்று ஒடிசா மாநிலம் புவனேஸ்வர் அருகிலுள்ள ஹண்டிபங்கா கிராமத்தில் நடைபெற்ற கிறிஸ்து தேவாலய திறப்பு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

புவனேஸ்வர் விமான நிலையத்திலிருந்து ஹண்டிபங்கா கிராமம் வரை சுமார் 7 மணி நேரம் மலைப்பாங்கான மற்றும் தொலைதூரப் பகுதிகள் வழியாக பயணம் செய்ய வேண்டியிருந்தது.

அன்று கிராமத்திற்கு வந்தபோது HO பழங்குடியினர் பாரம்பரிய நடனத்துடன் இருபுறமும் மலர்கள் தூவி அன்பான வரவேற்பு அளித்தனர். அவர்களின் வழக்கப்படி என் காலணியும் காலுறைகளையும் அகற்றி கால்களை கழுவி கடுகு எண்ணெய் தடவி சுத்தம் செய்து மீண்டும் காலணியை அணியச் செய்தனர். இது மிகவும் மனதைத் தொட்ட அனுபவமாக இருந்தது.

**தேவாலய திறப்பு விழா நிகழ்ச்சி**





22 பிப்ரவரி 2026 அன்று நடைபெற்ற திறப்பு விழா ஆரம்ப ஜெபத்துடன் தொடங்கியது.

பின்னர் “கிறிஸ்து தேவாலயம் – ஹண்டிபங்கா கிராமம்” என்ற பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டது.

ரிப்பன் வெட்டும் நிகழ்ச்சிக்குப் பிறகு, சபையினர் அனைவரும் புதிய தேவாலயத்தை மரியாதையுடன் மூன்று முறை சுற்றிவந்தனர்.

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

முதன்மை ஊழியர்
**BRO. ஆரோக்கியதாஸ் . P**
99870126

செயலாளர்
**BRO. தாமஸ்**
66810423

பொருளாளர்
**BRO. ஜான்சன்**
97610275

வாலிப ஐக்கிய தலைவர்
**BRO. M. கிறிஸ்டோபர்**
67096449

பெண்கள் ஐக்கிய தலைவி
**SIS. டெய்சி எபினேசர்**
60686612

ஒருவன் எனக்கு
ஊழியஞ்செய்தால் அவனைப்
பிதாவானவர் கனம்பண்ணுவார்

யோவான் 12:26

**Church e-mail ID - ahmaditamil.kw@hotmail.com**
**Church Website Address - ahmaditamilchurch.com**

**Church Postal Address**
**Your Name**
**PO.Box.No.46795**
**Fahaheel-64018**
**Kuwait**

PRIVATE CIRCULAR ONLY